# பகவான் போக மற்றும் யோக நரசிம்மர் ஆலயங்கள்

## சாந்திப்பிரியா



பெங்களூரில் இருந்து சுமார் 68 கி.மீ தொலைவில் உள்ள தும்கூரில் இருந்து 24 கி.மீ தொலைவில் உள்ள ஒரு மலை உச்சி மீது உள்ளதே பகவான் ஸ்ரீ லஷ்மி நரசிம்மர் ஆலயங்கள். பகவான் லட்சுமி

நரசிம்மர் ஆலயம் திராவிட பாணியிலான கட்டிடக் கலையில் கட்டப்பட்ட ஆலயம். அது கிழக்கு நோக்கி அமைந்து உள்ளது விசேஷ தன்மை ஆகும். அங்குள்ள இரு ஆலயங்களும் 2000 ஆண்டுகளுக்கும் முற்பட்டவை என்கின்றார்கள். பகவான் லட்சுமி நரசிம்மர் ஆலயத்தை விட பழமையானதாகக் கூறப்படும் மற்றொரு ஆலயமும் இந்த மலை மீது உள்ளது. அந்த ஆலயம் சஞ்சீவராயா என்றும் அழைக்கப்படும் பகவான் ஹனுமாவுக்கு அர்பணிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஆலயங்கள் அமைந்துள்ள மலையைச் சுற்றி கிரி வலம் செய்து பக்தர்கள் இறைவனிடம் பக்தி செலுத்துகிறார்கள். இந்த ஆலயங்களின் கதையை தெரிந்து கொள்ளும் முன்னர் பகவான் நரசிம்மர் அந்த பெயரை பெற்றுக் கொண்டதற்கு கூறப்படும் ஒரு கதை இது. ஸ்ரீமன் நரசிம்ம அவதாரத்தைக் குறித்து வியாசரும் மற்ற முனிவர்களும் நைமிசாரண்யத்தில் அமர்ந்து விவாதம் செய்து கொண்டிருந்த போது சில முனிவர்கள் ஸ்ரீமன் நரசிம்மர் தனது கூரிய நகங்களால் இரணியன் உடல்களைக் கிழித்து ஹிம்சித்ததால், அந்த அவதாரத்தை ஹிம்ஸன் (இம்சை செய்பவர்) என்று அவரை அழைக்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு வியாசர் கூறினாராம், மற்றவர்கள் பார்வைக்கு அந்த காட்சி ஹிம்சை போலத் தோன்றினாலும், அது உண்மையில் ஹிம்சை அல்ல. அவரவர் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப தண்டனை அனுபவிக்க வேண்டி இருப்பதினால், தனது பக்தனான பிரகலாதனின் தந்தை தன்னை அவமதித்த குற்றத்திற்காக நீண்ட காலம் நரகத்தில் துன்பப்பட வேண்டி இருந்திருக்கும். என்னதான் இருந்தாலும் தனது உண்மையான பக்தனான பிரகலாதனின் தந்தைக்கு அந்த கொடுமை அமைய வேண்டாம் என்பதற்காகவே அவனது பாபங்களைப் அங்கேயே சுக்குநூறாக கிழித்து எறிவதுபோல விலக்கி தூய்மையாக்கினார். மேலோட்டமாகப் பார்த்தால் அந்த நிகழ்வு

ஹிம்ஸை (கொடுமை) போலத் தெரிந்தாலும், அது ஸ்ரீமன் நாராயணர் உருவில் ஸ்ரீமன் விஷ்ணு அவனுக்கு காட்டிய கருணை எனும் பெயரிலான அனுக்கிரகத்தைத் தான் செய்தார் என்பதாக கூறினாராம். ஆகவேதான் நர என்றால் மாமிசம், சிம்ம என்றால் உக்ராஹம் மற்றும் ஹிம்சை என்பதையும் சேர்த்து பகவான் விஷ்ணு எடுத்த அந்த அவதாரத்தை பகவான் நரசிம்ஹ அவதாரம் என ஏற்றுக் கொண்டார்களாம்.

இந்த ஆலயங்கள் உள்ள மலை பகுதி ஒவ்ஒரு யுகத்திலும் ஒவ்ஒரு பெயரைக் கொண்டு இருந்தது. கிருதே யுகத்தில் உகேலாத்ரி எனவும், திரேதா யுகத்தில் சிம்ஹாத்ரி எனவும், துவாபர யுகத்தில் சித்தாகிரி எனவும் கலியுகத்தில் காரிகிரி எனவும் பெயர் பெற்றது என்பதாக கூறுகின்றார்கள். மூன்றடுக்காக உள்ள தேவநாராயண துர்கா என்ற மலைப் பகுதியில் கீழ்புறம் பகவான் போக நரசிம்மஸ்வாமி ஆலயமும், அதே மலையின் மேலே பகவான் யோக நரசிம்மஸ்வாமி ஆலயமும் உள்ளது. அதைத் தவிற அங்கு காந்திராவ் நரசராஜா என்பவர் கட்டியதாக கூறப்படும் பழுதடைந்த நிலையிலான பகவான் லஷ்மி நரசிம்மஸ்வாமி ஆலயத்தை மைசூர் மன்னரான கிருஷ்ணராஜ உடையார் சீர்படுத்தினாராம்.

கலியுகத்தில் காரிகிரி எனப் பெயர் பெற்றதின் காரணம் என்ன? அது குறித்து கூறப்படும் இரண்டொரு கதைகள் சுவாரஸ்யமானவை. தேவ லோகத்தில் தேவதத்தா மற்றும் தனன்ஜயா என்ற இரு கந்தர்வ சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் பாடல் புலமை மிக்கவர்கள். அவர்கள் பாடும் பொழுது அனைவரும் மெய் மறந்து அதை ரசிப்பது உண்டு. அத்தனை இனிமையான குரல் கொண்டவர்களின் பாடல்கள் மனதை மயக்கும். ஆனால் என்ன காரணத்தினாலோ பிருகு முனிவர் மட்டும் அவர்களுடைய பாடல்களில் மயங்கவில்லை. அவர்கள்

மற்றவர்கள் எண்ணுவது போன்று இசை ஞானம் இல்லாதவர்கள் எனக் குறை கூறி வந்தார். அதனால் கோபமுற்ற அந்த சகோதரர்கள் பிருகு முனிவரை அவமானப்படுத்தினார். கோபமுற்ற பிருகு முனிவர் அவர்கள் பூலோகத்தில் மலைகளாகப் பிறக்க வேண்டும் என சாபமிட்டு விட்டார். அதைக் கேட்டு மிரண்டு போனவர்கள் அவரிடம் மன்னிப்புக் கேட்க, அவரும் மலையாகப் பிறக்காமல் அவர்களில் ஒருவர் காரி எனவும் மற்றோருவர் கிரி எனவும் பெயர் கொண்ட யானைகளாகவும் அந்த மலையில் பிறப்பார்கள் எனவும் அதன் பின் அவர்கள் சாப விமோசனம் பெறுவார்கள் எனவும் கூறினார். அவர்களும் அந்தப் பெயரில் யானைகளாக அங்கு பிறந்ததினால் அந்த மலை காரிகிரி எனப் பெயர் கொண்டது.

அந்த இடத்திற்கு அந்த பெயர் வந்ததிற்காக கூறப்படும் இன்னொரு கதை என்ன எனில் ஹோய்சாலா மன்னர்கள் ஆட்சியில் மதம் பிடித்த யானை ஒன்று அந்தப் பகுதியில் இருந்த மக்களை துன்புறுத்தி வந்ததாகவும், அப்படி ஒரு நாள் அது அட்டகாசம் செய்த பொழுது அதை சேவகர்கள் துரத்த, அது வெறி பிடித்து மலை மீது ஏறிச் சென்று தப்ப முயன்ற பொழுது கால் இடறி விழுந்து அங்கு இறந்து விட்டதாம். ஆகவே அதற்கு யானை மலை என்ற பெயரான காரிகிரி என பெயர் ஏற்பட்டதாம். காரிகிரியை குசுமாத்ரி எனவும் கூறுவர். ஏன் எனில் பகவான் மகாவிஷ்ணு அந்த இடத்தில் அட்டகாசம் செய்து கொண்டு இருந்த புண்ரிகா என்ற அசுரனைக் கொன்ற பொழுது தேவர்கள் அவர் மீது மலர் மாறிப் பொழிந்தனர். ஆகவே அது குசுமாத்ரி (மலர் பொழிந்த இடம்) என்ற பெயர் பெற்றது.

ஆலயம் உள்ள இடம் பல பெருமைகள் பெற்ற இடம். அந்த இடத்திற்கு ரிஷிகள், முனிவர்கள் என பலரும் வந்து தவம் செய்துள்ளனர். ஒரு புராணக் கதையின்படி இராமபிரான் இலங்கை செல்லும் முன் அங்கு

வந்து தங்கி இருந்ததாகவும், அப்போது ஒரு குறிப்பிட்ட பாறை மீது அமர்ந்தபடி தன் நெற்றியில் திலகம் இட்டுக் கொள்வார் எனவும், ஒரு முறை திலகம் இட்டுக் கொள்ள தண்ணீர் கிடைக்காமல் போகவே தன்னுடைய அம்பினால் அந்த பாறையில் ஒரு ஓட்டைப் போட்ட பொழுது அதில் இருந்து கங்கை நீராக வெளி வந்துப் பாய்ந்தாளாம். ஆகவே அந்த இடத்தின் பெயர் நமது சிமுன்னி அதாவது இயற்கை நீர்வீழ்ச்சி என ஆயிற்றாம். இன்னமும் இராமபிரான் அமர்ந்ததாகக் கூறப்படும் அந்தப் பாறையில் இருந்து நீர் ஊற்று வருவதைக் காணலாம். அந்த இடத்தில் இராமரின் பாதச் சுவடு இருப்பதாகவும் கூறுகின்றனர்.

இந்த புனித இடத்தில்தான் பகவான் சதுர்முக பிரும்மதேவன் பகவான் நரசிம்மருக்கு ஆலயம் எழுப்பினாராம். அந்த இடத்தில் சுமார் பத்தாயிரம் வருடங்கள் கடுமையான தவத்தில் பகவான் பிரும்மா இருந்த பொழுது பகவான் மகாவிஷ்ணு அவர் முன் பகவான் யோக லஷ்மி நரசிம்மராக தோன்றினார். ஆகவே பகவான் பிரும்மா நரசிம்மரைத் துதித்து அவருக்குப் பாத பூஜை செய்ததாக ஒரு ஐதீகம் உண்டு. அந்த ஆலயத்தின் எதிரில் நரசிம்ம தீர்த்தம் என்ற குளம் உள்ளது. ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அந்த நீரை எடுத்து தம் மீது புரோஷ்ஷணம் செய்து கொள்வது பழக்கம். அது போல இந்த இடத்தில் பராசர முனிவர் தனக்கு குழந்தை வேண்டும் என தவம் இருக்க, பகவான் விஷ்ணுவே அவருக்கு மகனாக பிறந்தார் என்ற கதையும் உண்டு.

ஆலயத்தில் கருட ஆழ்வாருக்கும் மாடப்பள்ளி நாச்சியாருக்கும் சன்னதிகள் உள்ளன. மாடப்பள்ளி நாச்சியார் என்பதன் பொருள் ‘சமையலறை பெண்மணி , அதாவது இறைவனுக்கு வழங்கப்படும் நெய்வித்தியத்தை தகயாரிக்கும் சமையல் அறை' என்பதாகும்.

உண்மையில் திருப்பதியில் பகவான் விஷ்ணுவானவர் பகவான் ஸ்ரீனிவாசர் அவதாரத்தில் இருந்தபோது அவருக்கு உணவு வழங்க பகவான் வராஹர் அனுப்பிய தாயாரே வகுலா தேவி ஆவார். பூமியில் தாயார் பத்மாவதி தேவி திருப்பதியில் பகவான் ஸ்ரீனிவாசரை திருமணம் செய்து கொண்டது தாயார் வகுலா தேவியின் முயற்சியினால்தான் என்பது சரித்திரம். அதன் விரிவான கதையை திருப்பதி வெங்கடேஸ்வர பெருமாளின் வாழ்க்கை சரித்திரத்தில் படிக்கலாம்.

பெரிய மற்றும் சிறிய திருவடிகள் (கருடன் எப்போதும் திருமாலுக்கு வாகனமாகயிருப்பதால் அவர் பெரிய திருவடியென்றும், அனுமன் சிறிய திருவடி என்றும் போற்றப்படுகின்றனர்.) மலையடிவாரத்தில் அந்த இரு திருவடிகளும் யுத்தம் செய்து கொண்டு இருப்பதை பகவான் இராமபிரான் பார்த்துக் கொண்டு நிற்பது போன்ற தோற்றத்திலான 9-10 அடி உயர சிற்பமும் அங்கு உள்ளது.

# Lord Bhoga and Yoga Narasimha Temples

**Santhipriya**



Two temples of Lord Narasimha called Lord Yoga and Lord Bhoga Narasimha temples are located in Devanarayana which is at a distance of 24 km from Tumkur, about 68 km from Bangalore in Karnataka. Both temples are said to be over 2000 years old. Lord Bhoga Narasimha Temple is the first temple at Devarayanadurga located at the foot of the hill while Lord Yoga Narasimha Temple is the second major temple located on the hillock little higher and

further from Lord Bhoga Narasimha temple which have been built in Dravidian style architecture.

There is another temple on the same hill which is said to be older than the temple of Lord Lakshmi Narasimha. The temple is dedicated to Lord Hanuman, also known as Sanjeevaraya. Devotees circumambulate the hill where these temples are located to worship the Lords together. There is a story about how Lord Narasimha got that name in that incarnation. While Maharishi Vyasa and other sages were sitting in Naimisaranya forest and debating on the manifestation of Lord Narasimha, some sages said that the incarnation should be named as 'Himsai' meaning severe torture, because Lord Narasimha in that incarnation tore the body of Hiranyakashibu with sharp nails to cause him death in extreme pain. Maharishi Vyasa explained to them that although the act of the Lord in that incarnation outwardly appeared to be extreme torture, the real reason was that he had indeed showed mercy on him. Since every sinner act of one gets due punishment in Yama Log after death according to the extent of severity of the sin committed, Lord Vishnu thought that Hiranyakashibu was father of his true devotee Prahlada and therefore should not suffer in hell for a long time for the sin of insulting him (Lord Vishnu) by kicking the pillar where he (the Lord) stood. Therefore Lord Vishnu decided to condone the sin by awarding the punishment in such a manner that Hiranyakashibu get punished and die with extreme pain lasting only for few minutes, instead of suffering for a long period of torture in hell. Hence he tore his body and killed Hiranyakashibu with his nails causing extreme torture, which was an act of mercy. Hence the incarnate of Lord Vishnu should be called as Lord Narasimha in which Nara represents the human meat (flesh),

and Simha the extreme torture (equivalent to the tamil word Himsai) both conveying ‘the one who caused extreme torture on the sinner human (flesh)’.

This site bore different names in each of the Yugas. In the Kretha Yuga it was called Ugelathri, in Thretha Yuga it was called Simhathri, in Dwapara Yuga it was called Sithagiri and in Kali Yuga it was called Karigiri. This hill site called Devanarayana Durga consists of three tiers. On the lower part is Lord Bhoga Narasimha temple and in the upper part is Lord Yoga Narasimha temple. Besides those two temples, one more temple of Lord Lakshmi Narasimha stated to be much older than them exist in dilapidated condition, reportedly constructed by one Shri Kanthi Rao Narasaraja and renovated by King of Mysore Shri Krishnaraja Udayar.

How did the mountain derive the name Karigiri in Kaliyuga? The folklore tell different stories on them. There were two Gandharva brothers in Deva Loga, namely Devadatta and Dhananjaya. They were scholars in music and whenever they sang, everyone remained mesmerized by their melodious songs. But their appreciated talent was disputed by Maharishi Brigu who felt that they lacked something in the art of music. Therefore angered by his views, when the Gandharva brothers insulted Maharishi, the Rishi too got annoyed and cursed them to get born as mountains. They instantly apologized to the Maharishi and requested him to forgive them. Cooled down Maharishi, toned down his curse in such a manner, that both of them would be born as Elephants instead of as mountains and at appropriate time they would be freed of their sins. Since both were born as Elephants named Kari and Giri, and died subsequently, the mountain derived the name Karigiri.

As per another story, during the reign of Hoysala Kings, a rutting Elephant ransacked the belongings and holdings of everyone lived around and posed danger to them. The guards of the King attempted to capture the rut Elephant and chased it. The Elephant ran around in the mountain to escape and while attempting to escape, it slipped and fell down from the hill and died. Hence in honor of the poor Elephant, the mountain was named Karigiri, Kari meaning Elephant, and Giri meaning mountain.

Karigiri was also known as Kusumatri, because when Lord Vishnu killed a monster named Punrika, the celestials from the celestial sphere in sky showered flowers on Lord Vishnu hailing his victory. Hence it got the name Kusumatri meaning, the place where flowers were showered.

The place where these temples exist is full of glories. Several Rishis and sages used to visit this site and remained here for long time to perform penance. According to a legend, Lord Rama once came and stayed here for some time. Everyday he used to sit on a specific rock, picked up few droplets of water from the surface of the rock and applied on his forehead before commencing pooja. Once when no drops of water was seen on the rock, he fired an arrow which pierced through the rock from where mother Ganges flushed out water from her riverbed. Even today the water fall can be seen, which is called Chimunni meaning natural water fall. People also say that one can see the foot print of Lord Rama on the rock.

There is another legend. Once when Lord Brahma remained with four heads, he came to this site and established a temple for Lord Narasimha, remained on penance for over ten thousand years at the end of which, pleased with the penance, Lord Vishnu appeared before him in the form of Lord Yoga Lakshmi

Narasimha. Lord Brahma then performed Pada pooja (a ritual of anointing the foot with water in reverence) to Lord Narasimha there. The Lord Narasimha water tank exists there and devotees used to take few drops of water from the water tank and sprinkle on their head which is an important ritual to be performed to gain the blessings of the Lord. There is another lore that states that Lord Vishnu was born to Maharishi Parasara when the Maharishi remained on penance in this place seeking favor for an offspring from Lord Vishnu.

The temple has shrines for Lord Garudazhvar (Garuda the vehicle of Lord Mahavishnu) and Goddess Madapalli Nachiyar. Madapalli Nachiyar meaning 'Kitchen Lady where the food offered to the Lord is prepared', is actually none than Goddess Vagula Devi sent by Lord Varahar to offer food to Lord Vishnu when he was in the form of Lord Srinivasa in Tirupathi. It was Goddess Vagula who got Goddess Padmavathy get married to Lord Srinivasa in Tirupathi. The detailed story can be read in the life history of Lord Tirupathi Venkateswara. A 9-10 foot statue of Lord Rama in standing position has been sculpted as if he was watching the fight between Divine Garudazhvar and Lord Hanuman both called Thiruvadi meaning the ones who render service to the Lord (Vishnu).

Once a year, Lord Narasimha Jayanthi is celebrated on the day of the incarnation of Lord Narasimha. The most mysterious and surprising part of the festival is that a hawk (Garuda) come down from somewhere, circumambulate the chariot during its procession and fly away mysteriously.